# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2259/9 - 2021 දෙසැම්බර් මස 21 වැනි අඟහරුවාදා - 2021.12.21

*2259/9 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதில் நிதியமைச்சர், பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகிய நான், மக்காச் சோளத்தை (1005.90 HS குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டது) “கால்நடைத் தீவனங்களை” தயாரிப்பதற்காக மொத்தம் 40,000 மெட்ரிக் தொன் வரை இறக்குமதி செய்யும்போது, ஒரு கிலோவுக்கு ரூபா 25.00 என்ற பொருந்தக்கூடிய சிறப்புப் பண்ட வரியிலிருந்து கிலோ ஒன்றிற்கு ரூபா 10.00 வசூலித்த பின்னர், மீதித்தொகையை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையின் ஒப்புதல்/பரிந்துரையைப் பெற்ற உற்பத்தியாளர்களுக்கு விலக்களிப்பதற்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விஷேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ், 2021 மே 17 ஆந் திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு இல. 2228/3 இன் பிரிவு 2 இன் கீழ் கட்டளையைப் பிறப்பிக்கின்றேன்.

இவ் உத்தரவு 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் 06 மாத காலத்திற்கு செல்லுபடியாகும். இது 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விஷேட வியாபாரப்பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் துணைப் பிரிவு (3) இன் விதிகளுக்கு உட்பட்டது.

**பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்,**
பதில் நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2021, திசெம்பர் 21.

EOG 12-0222


1A - PG 5666 — 485 (2021/12) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.